முதல்வர் பிறந்த நாள் விழா – கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கல்!

# கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் - தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்!



## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவிப்பு!

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா கொடியேற்றி இனிப்பு வழங்கி நலத்திட்ட உதவிகள் மற்றும் தெருமுனை பிரச்சாரம் கூட்டங்கள் மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் நடைபெறுகிறது, அதுபற்றிய அவரது அறிவிப்பு விவரம்:-

| சட்டமன்ற தொகுதி | நாள்/ நேரம் | இடம் |
|---|---|---|
| திட்டக்குடி | 05.03.2025 | 1. மங்களூர் தெற்கு வ.சித்தூர் ஆலத்தூர் |
| | 05.03.2025 | 2. மங்களூர் கிழக்கு ஒன்றியம் கீரனூர் |
| | 05.03.2025 | 3. பெண்ணாடம் பேரூர் பெண்ணாடம் நகரம் |
| | 05.03.2025 | 4. நல்லூர் தெற்கு ஒன்றியம் 1. அரிகோி 2. எரப்பாவூர். 3. சாத்தநத்தம். |
| | திட்டக்குடி சட்டமன்ற தொகுதி | |
| தலைமை | நாள் / இடம் | ஒன்றியம், நகரம், பேரூர் |
| பா.செங்குட்டுவன் ஒன்றிய கழக செயலாளர் | 05.03.2025 ம.புதூர் | மங்களூர் தெற்கு ஒன்றியம் |
| த.சின்னசாமி ஒன்றிய கழக செயலாளர் | 05.03.2025 மா.பொடையூர் | மங்களூர் வடக்கு ஒன்றியம் |
| பட்டூர் வி.அமிர்தலிங்கம் ஒன்றிய கழக செயலாளர் | 05.03.2025 அரங்கூர் | மங்களூர் கிழக்கு ஒன்றியம் |
| சிவ.தியாகராஜன் ஒன்றிய கழக செயலாளர் | 05.03.2025 அரிகோி | நல்லூர் தெற்கு ஒன்றியம் |
| ம.குமார் பேரூர் கழக செயலாளர் | 05.03.2025 அம்பேத்கர் நகர் | பெண்ணாடம் பேரூர் |
| வி.பி.பி. பரமகுரு நகர கழக செயலாளர் | 05.03.2025 18வது வார்டு | திட்டக்குடி நகரம் |
| | விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி | |
| தி.வேல்முருகன் ஒன்றிய கழக செயலாளர் | 06.03.2025 பழவங்குடி | விருத்தாசலம் தெற்கு ஒன்றியம் |
| கனக. கோவிந்தசாமி ஒன்றிய கழக செயலாளர் | 06.03.2025 பரவலூர் | விருத்தாசலம் வடக்கு ஒன்றியம் |
| பாவாடை கோவிந்தசாமி ஒன்றிய கழக செயலாளர் | 06.03.2025 சேப்பாக்கம் | நல்லூர் வடக்கு ஒன்றியம் |
| க. தண்டபாணி நகர கழக செயலாளர் | 06.03.2025 பெரியார்நகர் | விருத்தாசலம் நகரம் |
| ஆசைதம்பி ஒன்றிய கழக செயலாளர் | 06.03.2025 மேலக்குப்பம் | கம்மாபுரம் கிழக்கு ஒன்றியம் |
| பழனி. சுரேஷ் ஒன்றிய கழக செயலாளர் | 06.03.2025 முதனை | கம்மாபுரம் மேற்கு ஒன்றியம் |
| செல்வம் (எ) பாலசுப்பரமணி பேரூர் கழக செயலாளர் | 06.03.2025 பெரியார் சிலை அருகில் | மங்கலம் பேட்டை பேரூர் |
| | நெய்வேலி சட்டமன்ற தொகுதி | |
| அ.குணசேகரன் ஒன்றிய கழக செயலாளர் | 09.03.2025 புலியூர் | குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியம் |
| சபா. ராஜேந்திரன். MLA., ஒன்றிய கழக செயலாளர் | 09.03.2025 காடாம்புலியூர் | பண்ருட்டி தெற்கு ஒன்றியம் |
| குருநாதன் நகர கழக செயலாளர் | 09.03.2025 21வதுவட்டம் | நெய்வேலி நகரம் |
| | பண்ருட்டி சட்டமன்ற தொகுதி | |
| வி.கே.வெங்கட்ராமன் ஒன்றிய கழக செயலாளர் | 08.03.2025 காமராஜர்சிலைஅருகில் P.N. பாளையம் | அண்ணா கிராம ஒன்றியம் |
| ப. மணிவண்ணன் நகர கழக செயலாளர் | 08.03.2025 டெலிபோன் அலுவலகம் முன்பு, வார்டு எண்.09 | நெல்லிக்குப்பம்நகரம் |
| கே. ராஜேந்திரன் நகர கழக செயலாளர் | 08.03.2025 வார்டுஎண்.22 | பண்ருட்டிநகரம் |
| ஆர். சுந்தரவடிவேல் பேரூர் கழக செயலாளர் | 08.03.2025 காசி விஸ்வநாதர் ஆலயம். | தொரப்பாடிபேரூர் |
| வ. ஜெயமூர்த்தி பேரூர் கழக செயலாளர் | 08.03.2025 வார்டு எண்.04, நத்தமேடு. | மேல்பட்டாம்பாக்கம் பேரூர் |
| ரா. சந்தோஷ்குமார் ஒன்றிய கழக செயலாளர் | 08.03.2025 சேமைக்கோட்டை. | பண்ருட்டி வடக்கு ஒன்றியம் |

**அமைச்சர் சி.வெ.கணேசன்**
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணிகள் சார்பாக மதுரை அண்ணாநகரில் நடைபெற்ற மதுரை வடக்கு, தெற்கு சட்டமன்ற தொகுதி கர்ப்பிணி பெண்கள் பங்கேற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் வடக்கு சட்டமன்ற உறுப்பினர், மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி, தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், முன்னாள் எம்.எல்.ஏ., வ.வேலுசாமி, முன்னாள் மேயர் பெ. குழந்தைவேலு ஆகியோர் முன்னிலையில் அரசின் சார்பில் சீர்வரிசைப் பொருட்கள் மற்றும் முதல்வர் பிறந்த தினத்தை முன்னிட்டு பொதுக்குழு உறுப்பினர் ஏ.கே.ஆறுமுகம் ஏற்பாட்டில் புத்தாடைகளையும் வழங்கி வாழ்த்தினார். உடன் மண்டல தலைவர்கள் சரவணபுவனேஸ்வரி, முகேஷ் சர்மா, பாண்டிச்செல்வி, முன்னாள் துணை மேயர் மிசா.எம்.பாண்டியன், கழக நிர்வாகிகள் வைகை பரமன், முத்துகணேசன், மணிமாறன், வெள்ளத்துரை, நூர்ஜகான் பேகம் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள், கர்ப்பிணி பெண்களின் குடும்பத்தார் என திரளானோர் பங்கேற்றனர்.

# கல்லக்குடி கொண்ட கலைஞர்!



ஒரு மாநிலம் தனக்கான மொழிக் கொள்கையை வைத்திருப்பதற்கும் , தன்னுடைய கல்வி நிதியை ஒன்றிய அரசிடம் இருந்து பெறுவதற்கும் நிச்சயமாக யாரும் தடையாக இருக்க முடியாது .

ஏனென்றால் கூட்டாட்சி முறையில் அந்தந்த மாநிலங்களுக்கான தனித்துவத்தை பரஸ்பரம் மதிப்பதும் ஏற்றுக்கொள்வதும் நடைமுறையில் உள்ள ஒரு விஷயம் .

ஆனால் இன்றைக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது? ஒன்றிய அரசு தான் விரும்பிய கல்வியை, பாடத்திட்டத்தை , மொழியை, மாநில அரசு நடத்தக் கூடிய பள்ளிகளுக்குள் கொண்டு சேர்க்க வேண்டும் என்கிற தீராத வேட்கையோடு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அதற்கு உடன்பட மறுக்கிற இந்த மாநிலத்தினுடைய நிதியை தருவதற்கு மறுத்துக் கொண்டிருக்கிறது. தர மாட்டோம் என அமைச்சரின் வாயாலேயே சொல்ல வைக்கிறது.

ஒருபுறம் மாநில கல்வியை முடக்கப் பார்க்கிறது, இன்னொரு புறம் மாநிலத்தினுடைய உரிமைகளை மறுக்கப் பார்க்கிறது .

இந்த இரண்டு விஷயங்களையும் தன்னுடைய அதிகார பலத்தினாலும், மாநிலங்களை எப்படியாவது அடிபணிய வைத்து விட முடியும் என்கிற முட்டாள்தனமான நம்பிக்கையிலிருந்தும், ஒன்றிய பாசிச அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

இந்த மாநிலம் கல்வியில் தான் உருவாக்கி வைத்திருக்கக்கூடிய தனித்த பாதை என்பது நிச்சயமாக ஒவ்வொரு இந்தியர்களும் பார்த்து வியக்கக் கூடிய அளவிற்கு உயர்வு கொண்டதாக இருக்கிறது.

உலகளாவிய அளவில் தமிழர்களுடைய பங்களிப்பு என்பது கல்வியினாலும், அண்ணா வகுத்தளித்த இரு மொழிக் கொள்கையினாலும் சிறப்பான ஓர் இடத்தில் இருந்து கொண்டிருக்கிறது.

உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் அதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இன்று அதிலிருந்து இந்த மாநிலத்தை வீழ்த்த வேண்டும் என்பதற்கான ஒரு முயற்சியை ஒன்றிய அரசாங்கம் எடுத்திருக்கிறது. ஏற்கனவே நமது மருத்துவக் கட்டமைப்பை தகர்த்தெறிய நீட்டை கொண்டுவந்தது போல இன்று அந்த நிதி மறுப்பை கையில் எடுத்திருக்கிறார்கள்.

அதை நியாயப்படுத்துவதற்காக ஒன்றிய அரசினுடைய கட்சி சார்ந்த பல “மேதாவிகள்” மாநில அளவில் மிகப்பெரிய பொறுப்பில் இருக்கக் கூடியவர்கள் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் . அவர்கள் என்ன சொல்லி நியாயப்படுத்த முடியும்?



**கவிஞர் சல்மா**
கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர்

ஒரு மாநிலத்தினுடைய நிதியைப் பறித்துக் கொண்டு நாங்கள் நீ இதைச் செய்தால் தான் அதை தருவோம் என்று சொல்வதற்கு எவ்வளவு திமிரும், ஆணவமும் இருக்க முடியும்? அதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா?.

அப்படி சொல்லுவதற்கான அதிகாரத்தை யாரும் யாருக்கும் இன்னும் தரவில்லை இந்த நாட்டில்.

இந்தியை நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள் , மூன்றாவது மொழி நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள் , என்று தொடர்ச்சியாக நம் மக்கள் மீதும் மாநிலத்தின் மீதும் ஒரு அழுத்தத்தை தருவது என்பது அடாவடித்தனம் தவிர வேறு எதுவும் இல்லை.

வட மாநிலங்களில் 18 வயதுள்ள பெண்கள் ப்ளஸ் டூ முடிப்பது 30 சதவீதமாக இருக்கும் போது, தமிழ்நாட்டில் ப்ளஸ் டூ முடிக்கும் பெண்பிள்ளைகள் 87 சதவீதம் . இப்படித்தான் நாம் கல்வியை அடிமட்டம் வரை, அனைத்து பிரிவினருக்குமானதாக, ,பாகுபாடற்றதாக மாற்றியிருக்கிறோம்.

மனிதர்கள் யாரும் தங்களுக்கு விருப்பமானதை வாங்கலாம், பயிலலாம், அதுதான்சுதந்திரத்திற்கான அடிப்படையாக இருக்க வேண்டும் .

ஆனால் எங்களுக்குப் பிடித்த மொழியை நீங்கள் கற்க வேண்டும், எங்களுக்கு பிடிக்காத உணவை நீங்கள் உண்ணக்கூடாது, நாங்கள் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும் என்கிற இந்த ஆணவமும், அராஜகமும் பா.ஜ.க. ஆட்சியினுடைய மிக அவலமான அடையாளமாக இருந்து வருகிறது .

அவர்கள் எதையெல்லாம் சரி என்று நம்புகிறார்களோ, அதை ஒற்றை நம்பிக்கையாக மாற்றப் பார்க்கிறார்கள். எதையெல்லாம் அவர்கள் விரும்புகிறார்களோ, அதை பிறருக்கான விருப்பமாக மாற்றப் பார்க்கிறார்கள் .

அதை செய்யாதவர்கள் மீது வன்முறையை கையில் எடுக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் மீது ஏதேனும் ஒரு விதத்தில் தாக்கு தலை நிகழ்த்துவது என்பது இந்தக் காலக்கட்டத்தில் மட்டுமல்ல, எந்தக் காலக்கட்டத்திற்கும் பொருந்தாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இங்கே நடந்த மொழி போராட்டத்தின் தீவிரத்தை அறிந்தும் கூட அவர்கள் இன்றைக்கு இந்த மிரட்டலை மறுபடியும் கையில் எடுக்கிறார்கள்.

எமர்ஜென்சியில் எதிர்த்து அடித்தது இந்த இயக்கம்.

மொழிப் போராட்டத்தின் வழியாக இந்த இனம் தன்னை காத்துக் கொள்வதற்கும், தன்னுடைய மொழியை காத்துக் கொள்வதற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற ஒரு இயக்கம் இருந்தது.

இருந்து கொண்டிருக்கிறது, இனியும் இருக்கும்.

அது இருக்கும் வரை தங்களால் இந்த நிலத்தின் மீது எந்த விதமான உரிமையையும் கொண்டு வருவதற்கு பா.ஜ.க.வினால் முடியாது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

அப்படி ஒரு தன்னெழுச்சியான ஒரு மாநிலமாக இந்த மாநிலத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் மாற்றி வைத்திருக்கிறார்.

பகுத்தறிவும், சிந்தனை திறனும், கல்வி அறிவும் பெற்ற, மக்கள் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால்,

அப்படிப்பட்ட மக்களை, மாநிலத்தை உருவாக்கி வைத்திருப்பவர் தலைவர் கலைஞர்.

இன்றைக்கு இந்த இயக்கத்தை கட்டி காக்கக்கூடியவர், அதேபோன்று தீரத்துடனும், விவேகத்துடனும், மக்களையும், இனத்தையும் மொழியையும், காக்கக் கூடியவராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர் இன்றைக்கு தமிழ்நாட்டில் கல்விக்காக செய்து கொண்டிருக்க கூடிய சாதனைகளை நிச்சயமாக இந்தியாவில் இருக்கக்கூடிய எந்த ஒரு மாநிலமும் இதுவரை சிந்தித்திருக்கக் கூட மாட்டாது.

அந்த அளவிற்கு ஒவ்வொரு விஷயமாக கல்வியின் வளர்ச்சிக்காக திட்டமிட்டு பல்வேறு விதமான சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன.

குழந்தைகளில் இருந்து இளைஞர்கள், பெண்கள் வரை தங்களுடைய கல்வியை எந்தவிதமான தடுமாற்றமும் இல்லாமல் தொடர்வதற்கான வாய்ப்பை இந்த ஆட்சியில் முதலமைச்சர் அவர்கள் செய்து வைத்திருக்கிறார்கள்.

அரசு பள்ளியில் படிக்கக்கூடிய பிள்ளைகள், அவர்களுக்கான தனித்திறமையை நிரூபிக்கக் கூடிய ‘நான் முதல்வன்’ திட்டமெல்லாம் இந்த நாட்டில் எந்த ஒரு மாநிலமும் இதுவரை சிந்தித்ததும் இல்லை செயல்படுத்த போவதுமில்லை.

அப்படிப்பட்ட ஒரு நிலையில்தான் இன்றைக்கு இந்த மாநிலம் தன்னை உயர்த்தி வைத்திருக்கிறது.

கல்வி நிதியை தர முடியாது என்று தன்னைத் தானே இழிவுபடுத்திக் கொண்டு விட்டது இன்றைய பா.ஜ.க. அரசு.

நீங்கள் தர மறுப்பது உங்களை நீங்களே அசிங்கப்படுத்திக் கொள்வதற்கு சமம். மக்களுக்குச் சேவை செய்வதற்கான, மக்களுக்காக உழைக்கக் கூடிய ,இந்த அரசை இப்படி எல்லாம் மிரட்டி பணிய வைக்க முடியாது.

இந்த அரசு கல்விக்கு எதிராக எத்தனை தடங்கல்கள் வந்தாலும், மொழிக்கு எதிராக எத்தனை போர் வந்தாலும் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இந்த மாநிலத்தினுடைய மொழி உரிமையை, கல்வி வளர்ச்சியை , காப்பாற்றுவார்.

மொழியை உயிராக பார்த்த இனம் இது.

ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். மொழிக்காக தன் தலையை தண்டவாளத்தில் வைத்த ‘கல்லக்குடி கொண்ட கருணாநிதி’ முதல்வராக இங்கே ஆண்டு மறைந்திருக்கிறார். அவரது பிள்ளை இங்கே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆண்டு கொண்டிருக்கிறார், கலைஞரது பேரன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இனி வரும் காலங்களில் ஆள்வார், இனத்தைக் காப்பார் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது.